# 115வது MASU நாள் விழாவில்

# தேசியளவில் சிறந்து விளங்கும் வேளாண் அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன

கோயம்புத்தூர், ஜூலை 20

இந்தியாவின் மிகப்பழமையான மற்றும் பெருமைமிக்க வேளாண் மாணவர் அமைப்புகளில் ஒன்றான மெட்ராஸ் வேளாண் மாணவர் கூட்டமைப்பு (MASU), 1911 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1923 ஆம் ஆண்டு சங்கமாகப் பதிவு செய்யப் பட்ட இவ்வமைப்பு, தனது 115வது MASU நாள் விழா மற்றும் பொதுக்குழு க்கூட்டம் — 2026-ஐ, 14.07.26 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அண்ணா அரங்கில் சிறப்பாகக் கொண்டாடியது.




850-க்கும் மேற்பட்ட ஆயுட்கால உறுப்பினர்களையும், 4,500-க்கும் மேற்பட்ட மாணவர் உறுப்பினர்களையும் கொண்டுள்ள MASU, கடந்த 115 ஆண்டுகளாக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், அறிவியலாளர்கள், கல்வியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் வேளாண் வல்லுநர்களை ஒருங் கிணைத்து, இந்திய வேளாண்மையின் முன்னேற்றத்திற்கும், தலைமைத்துவ வளர்ச்சிக்கும், புதுமைகளுக்கும் தொடர்ந்து பங்களித்து வருகிறது.

விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல்துணைவேந்தரும், MASU-வின் தலைமைப் புரவலருமான



முனைவர் கா. சுப்ரமணியன் தலைமை வகித்தார். MASU தலைவர் மற்றும் இயக்குநர் (CPMB & B) முனைவர் ந.செந்தில் வரவேற்புரையாற்றி, வேளாண் சமூகத்தின் முன்னேற்றத்தில் MASU-வின் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்புகளை எடுத்துரைத்தார்.

MASU செயலாளர் முனைவர் கோ.பூமிராஜ், ஆண்டறிக் கையை சமர்ப்பித்தார். அதில், MASU விருதுகள் - 2026-க்கு வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறந்த வல்லுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்

முனைவர் கா. சுப்ரமணியன் தலைமை வகித்தார். MASU தலைவர் மற்றும் இயக்குநர் (CPMB & B) முனைவர் ந.செந்தில் வரவேற்புரையாற்றி, வேளாண் சமூகத்தின் முன்னேற்றத்தில் MASU-வின் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்புகளை எடுத்துரைத்தார்.

MASU செயலாளர் முனைவர் கோ.பூமிராஜ், ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். அதில், MASU விருதுகள் - 2026-க்கு வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறந்த வல்லுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப் பட்டதாகத் தெரிவித்தார். ஆய்வுக் குழுவின் துல்லியமான மதிப்பீட்டின் அடிப்படையில், வேளாண் ஆராய்ச்சி, வேளாண் விரிவாக்கம், வேளாண் தொழில்முனைவு, இளம் சாதனை யாளர், வேளாண்தொழில்நுட்ப முன்னோடி, புதுமைச் சிறப்பு மற்றும் இந்திய வேளாண்மைக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியோரைக் கௌரவிக்கும் வகையில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட தேசியச் சிறப்பு விருது உள்ளிட்ட பிரிவுகளில் விருதாளர்கள் தேர்வு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

மேலும், MASU நாள் 2026-ஐ முன்னிட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங் களிலும் நடத்தப்பட்ட கல்வி, இலக்கியம், பண்பாடு மற்றும் தொழில்நுட்பப் போட்டிகளில் 150-க்கும் மேற்பட்ட மாணவர்கள் வெற்றி பெற்று சிறப்பித்ததாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண்மைப்புல முதன்மையரும், பட்டமேற்படிப்புக் கல்விப்பள்ளி முதன்மை யருமான முனைவர் ச.பாபு வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி ICAR - தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் முனைவர் யூ.செல்வராஜன் மற்றும் கோயம்புத்தூர் வன மரபியல் மற்றும் மரப்பெருக்க நிறுவகத்தின் முதன்மை தலைமை வனப் பாதுகாவலரும் இயக்குநருமான வீ.ரபிகுமார், ஆகியோர், வேளாண் கல்வி, ஆராய்ச்சி, புதுமை மற்றும் முன்னாள் மாணவர் ஒருங்கிணைப்பில் MASU ஆற்றிவரும் சிறப்பான பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

நாட்டின் வேளாண் வளர்ச்சிக்காக சிறப்பான பங்களிப்பை வழங்கிய அறிவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், புதுமை யாளர்கள் மற்றும் வேளாண் முன்னோடிகளுக்கு MASU விருதுகள் - 2026 வழங்கப்பட்டன.



மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளாகங்களில் நடைபெற்ற MASU நாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

MASU விருதுகளுக்கான தேர்வை வெளிப்படைத் தன்மை, நேர்மை மற்றும் தகுதி அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வுக் குழு உறுப்பினர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

இது MASU விருதுகளின் நம்பகத் தன்மையையும் பெருமையையும் மேலும் உயர்த்தியுள்ளது.

யாளர்கள் மற்றும் வேளாண் முன்னோடிகளுக்கு MASU விருதுகள் 2026 வழங்கப்பட்டன.



மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளாகங்களில் நடைபெற்ற MASU நாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

MASU விருதுகளுக்கான தேர்வை வெளிப்படைத் தன்மை, நேர்மை மற்றும் தகுதி அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வுக் குழு உறுப்பினர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

இது MASU விருதுகளின் நம்பகத் தன்மையையும் பெருமையையும் மேலும் உயர்த்தியுள்ளது.

பொதுக்குழுக் கூட்டத்தில், கடந்தாண்டு செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டதுடன், எதிர்காலத் திட்டங்கள், உறுப்பினர் சேர்க்கை விரிவாக்கம், முன்னாள் மாணவர் தொடர்புகளை வலுப் படுத்துதல், மெட்ராஸ் வேளாண் இதழின் உலகளாவிய பரவலை அதிகரித்தல் மற்றும் MASU-வின் நோக்கங்களை மேலும் வலுப்படுத்த புதிய முயற்சிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப் பட்டது.

மெட்ராஸ் வேளாண் மாணவர் கூட்டமைப்பு இந்திய வேளாண் கல்வி மற்றும் தொழில்முறை தலைமைத்துவத்தின் அடையாள மாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

நிகழ்ச்சியின் நிறைவாக, MASU துணைத் தலைவர் முனைவர் M. கார்த்திகேயன் நன்றியுரை வழங்கினார்.






